24 மே 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH பாஸ்கா காலத்தின் 7 ஆம் ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்



மாதாந்திர கருப்பொருள்: **நிறைவான வாழ்வு**

## தன்னலத்திலிருந்து பொதுநலம்

தந்தையின் அளவற்ற அன்பு, மகனின் மீட்பளிக்கும் செயல், தூய ஆவியானவரின் பொங்கியெழும் அருள். தமதிரித்துவத்தின் உண்மைகள் ஆழமாக, கிறிஸ்துவர்களாகிய நமக்கு கிடைப்பதால், தொடர்ந்து, நாம் நம்பிக்கையில் முதிர்ச்சி அடைவோம்.

பாவத்தில் வாழ்ந்த நம்முடைய பழைய வாழ்க்கை திருமுழுக்கின் நீரினுள் முழ்கி தூய்மையாக்கப்பட்டு, கிறிஸ்துவோடு புதியனவாக எழுகிறோம். இனி நமக்காக மட்டுமல்ல; கடவுளுக்காகவும், பிறருக்காகவும் வாழ்கிறோம். வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமென்றால், தன்னலமற்ற வாழ்வு வாழ, நம்முடைய சுயநலத்திலிருந்து வெளியே வர அழைக்கப்படுகின்றோம். சகோதர சகோதரிகளே, நாம் பெரிய சமூகத்தின் ஒரு பகுதியாக இருக்கின்றோம். உலக திரு அவையின் ஒரு பகுதியாக இருக்கின்றோம். நாம் கத்தோலிக்கர்கள்.

நம்முடைய மீட்புக்காகவும், நம் சகோதர சகோதரிகளின் மீட்புக்காகவும், கத்தோலிக்கர்களாகிய நாம் ஒரு பெரிய பணியை எடுத்துள்ளோம். இயற்கையாகவே இது மிகப்பெரியது என்றாலும், ஒரு சிலர் இதை ஒரு சுமையாகவோ அல்லது வாழ்க்கையில் ஒரு சிக்கலான வழியாகவோ கருதலாம். நம்மை அன்பு செய்வதைப் போலப் பிறரையும் நாம் அன்பு செய்ய அழைக்கப்பட்டுள்ளதை நினைவுகூருவோம்.( மத்தேயு: 22:36) இயேசு கூறிய இரண்டாவது கட்டளை முதல் கட்டளைக்கு இணையானது. நம் ஆண்டவர் அவர் கற்பித்த போதனைகளில் உறுதியாக இருக்கிறார். ஆனால், இறுதியில் நமக்கு தெரிவு செய்யும் உரிமை உள்ளது. தன்னலத்தோடு நமக்காக வாழ்வது; அல்லது அவரின் விருப்பத்திற்கினங்க வாழ்வது.

என் பெயரால் தந்தை அனுப்ப போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார்; நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார். நாம் செல்லும் பாதை கடினமானது தான் ஆனால், ஆண்டவரில் நம்பிக்கை கொள்வோம். ஏனென்றால் இந்தப் பயணத்தில் நாம் தனித்து இல்லை. வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு சவால்களும் இயேசுவைப் போல் நாம் மாற ஆற்றலைக் கொண்டுள்ளது. தூய ஆவியாரைப் பெற்றுக்கொள்ளும்வரை அப்போஸ்தலர்கள் அச்சத்தில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் தான், தூய ஆவியாரைப் பெற்றவுடன், அச்சத்திலிருந்து வெளிவந்து, கடவுளின் மகிமைக்காகவே வாழ்ந்தனர். நாமும் கிறிஸ்துவர்கள் என்ற அடையாளத்தை ஏற்றுக்கொள்வதால், பாடுகளின் வாழ்விலும், பாடுகள் வழியாக மீட்பரிடம் நாம் கொண்டுள்ள அன்பின் வழியாகவும், நடுநிலையாகவும், நிலைத்தன்மையோடும் கிறிஸ்துவோடு எழுவோம்.

உண்மையாகவே நாம் உயிரோடு உள்ளோம்; ஏனென்றால் கிறிஸ்து நம்மில் வாழ்கிறார். ✝

**செபி, நம்பிக்கை வை, கவலைப்படாதே! கவலைப்படுவது வீண்.**

– புனித பாட்ரி பியோ

### இன்றைய வாசகங்கள்:

திருத்தூதர் பணிகள்: 1:12-14

திருப்பாடல்: 27: 1-4, 7-8

1 பேதுரு: 4:13-16

யோவான்: 17: 1-11

### வாரம் ஒரு வசனம்

ஆண்டவரில் நம்பிக்கை வைப்போம்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 21/2020

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org




**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்


*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*

***மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்***

*2020 மே (வைகாசி) மாதத்தின் கருப்பொருள்:*

***நிறைவான வாழ்வு***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** உயிர்ப்புக் காலம் 7 ஆம் ஞாயிறு 23 - 31 மே 2020
தி.பணி 1 :12-14 தி.பா: 27: 1, 4, 7, 8 1 பேதுரு 4: 13-16 யோவான் 17: 1-11
**" வாழ்வோரின் நாட்டினிலேஆண்டவரின் நலன்களைக் காண்பேன் என்று நான் இன்னும் நம்புனிறேன் ! " - தி.பா 27**

நடமாட்டக் கட்டுப்பாட்டு நேரத்தில் (2020 மார்ச் 18 - 17 மே) வரை பெறப்பட்ட காணிக்கைகள்:

| பங்கு காணிக்கை | பங்கு காணிக்கை | தியான இல்லம் | பமமேகு உணவு வங்கி |
|---|---|---|---|
| மொத்த தொகை: | **RM18,260.00** | **RM12,438.00** | **RM1530.00** |

***உங்களின் அனைத்து வகையான பங்களிப்புகளுக்கும் மிக்க நன்றி.***
***இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!***

**நன்கொடை / காணிக்கைகள்**
**கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**

(1)பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**

1.வங்கியின் பெயர்: Public Bank Berhad
2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: Church of Visitation
3.வங்கிக் கணக்கு எண்: 3121194612

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**

(i) தொகை (ii) என்ன காராணம்:
(1) பங்கின் நிதி காணிக்கை
(2) திருப்பலி கருத்துகள் (பெயர்) - ஆன்ம இளைப்பாற்றி, நன்றி, அல்லது தனிப்பட்ட கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு
(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு: ஜோன் டேவிட்சன்(017-615 8961) அல்லது பென்னதெத் (012- 2715840)

பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். serembanvisitation@gmail.com

கொவிட் 19 முன்னிட்டு அடுத்த அறிவிப்புகள் வரும் வரை திருப்பலிகள் ஆலயத்தில் நடைபெறாது.

பங்கு அலுவலகம் திறந்திருக்கும்: 27-05-2020 முதல் 30-05-2020
அலுவலக நேரம்: காலை 8.30 - பகல் 1.30 வரை

*மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்*

*(1)* ரெய்ன் ஹார்ட் ஹெரெரா - இறப்பு: 15/4/20)
*(2)* கொவி 19 நோயால் மரித்த அனைத்து ஆன்மாக்களுக்காகவும்

*முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!*

➢ ***ஆவியில் நிலைத்திருப்பது***

அன்புள்ள சகோதர சகோதரிகளே!, மே 31 ஆம் தேதி, பெந்தகோஸ்தே பெருவிழா மற்றும் நம் பங்கின் திருவிழாவும் ஆகும்.: ***"உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது, அவர் முழு உண்மையை நோக்கி, உங்களை வழி நடத்துவார். அவர் தாமாக எதையும் பேசமாட்டார்; தாம் கேட்பதையே பேசுவார்; வரபோகிறவற்றை உங்களுக்கு அறிவிப்பார். (யோவான்: 16:13 )***
நம் அன்னை மரியாள் உண்மையாகவே ஆவியில் நிறைந்தவராய் எலிசபெத்துக்கு, தம்முடைய மாபெரும் தாழ்ச்சியான பணிவிடையைத் தந்தார். ஆவியில் நிறைந்த வாழ்வாக இல்லாவிட்டால், கடவுளின் கொடையைப் பெற்றுக்கொள்ள முடியாது ; ஏனென்றால், அதுவே அவர்களுக்கு ஆவியைப் பகுத்தறிவதற்குத் தடையாக இருக்கும். இந்த பெந்தகோஸ்தே நாள் நம் அனைவரின் உள்ளங்களையும் ஆண்டவரின் அருளால் நிறைவித்திடவும், அவரின் அன்புக் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் வழியாக, அன்னை மரியாளைப் போல நாமும் வாழ உதவிசெய்திடவும் மன்றாடுவோம். உங்கள் அனைவருக்கும் பங்குத் திருவிழா நல் வாழ்த்துகளும், பெந்தகோஸ்தே ஞாயிறு வாழ்த்துகளும் உரித்தாகுக!

***அருட்பணி: சேவி மற்றும் கென்னத்***

➢ **நடமாட்டக் கட்டுப்பாட்டை முன்னிட்டு, இறப்பு சடங்குகளுக்கான வழிமுறைகள்.**
(1) வீடுகளில் அல்லது பார்லரில் ஏழு நாள் செப வழிபாடு நடைபெறாது. குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே தனிப்பட்ட வகையில் செப வழிபாட்டை நடத்திக்கொள்ள வேண்டும். இதற்குத் தேவையான செப புத்தகங்கள் பங்கு/அதிச விலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.. இறப்பு இல்லத்தில் நெருங்கிய உறவினர்கள் மிக குறைவான நேரமே இருக்க முடியும்.
(2) விழிப்பு செபங்கள் பங்கு குருவானவரால் இல்லத்திலேயே நடத்தப்பட வேண்டும். இது நம்முடைய நாட்டின் நடமாட்டக் கட்டுப்பாட்டு வழிமுறைகளின்படி இறப்பு இல்லத்தில் அதிகமான நபர்களைக் கட்டுப்படுத்த உதவும். மேலும் இதனால் நம்முடைய ஆலயமும் எந்த வழிபாட்டுக்கும் திறந்திருக்காது.
(3) இந்த நேரத்தில் பிற சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் கடைப்பிடிப்பது அவசியம். (இடைவெளியைக் கடைப்பிடித்தல்)

➢ ஏப்ரல் மாதத்தில் முன்பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் வேறு தேதிகளுக்கு மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

➢ தினமும் இணையத்தின் வழி திருப்பலிகளில் பங்கெடுக்க: ***www.Tv.ArchKL.org***
**2020 மே 23 - 29 வரை**

| | | | | |
|---|---|---|---|---|
| **சனிக்கிழமை:** | **23-05-2020:** | **மாலை** | **6.00** | **ஆங்கிலம்** |
| **ஞாயிறு** | **24-05-2020** | **காலை** | **7.30** | **தமிழ்:** |
| | | **காலை** | **9.00** | **மாண்டரின்** |
| | | **காலை** | **10.30** | **ஆங்கிலம்** |

**வார நாள்: திங்கள் - வெள்ளி வரை மாலை 6.00 மணி திருப்பலி ஆங்கிலத்தில்**
**செபமாலை - புதன் 27-05-2020 மாலை 7.00 ணிக்கு பேராயர் ஜூலியன் அவர்களுடன் செபமாலையில் இணைந்திருப்போம்.**